## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **M.C.O.P. No. 40/2021** | **Date : 21**.02.2024 | **PW1** |
| Name: ஜீவா | S/o மயில்சாமி | |
| Evidence Recorded Time: 12.45 P.M. to 12.50 P.M. | | |

**3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாய வேலை செய்து வருகிறேன். என்ன படித்துள்ளேன் என்றால் ஸ்போர்ட்ஸ் மேனேஜ்மெண்ட் முடித்துள்ளேன். டிஎன் 52 டி 2196 என்ற இருசக்கர வாகனத்தை பரத் ஓட்ட நான் நடுவில் அமர்ந்து சென்றேன். என்றால் சரிதான். எனக்கு பின்னால் சேரன் உட்கார்ந்து வந்தார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் 3 பேர் பயணம் செய்தோம் என்றால் சரிதான்.எங்கள் வண்டி இன்னொரு இருசக்கர வாகனத்தில் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரில் வந்த வண்டி எண் டிஎன் 93 பி 2129 என்ற வாகனம் ஆகும். எதிரில் வந்த வண்டியிலும் 3 பேர் வந்தார்கள் என்றால் சரிதான். நான் உட்கார்ந்து சென்ற வாகனத்தின் உரிமையாளர் பரத் அப்பா ஆவார். அவரையும் காப்பீட்டாளரையும் தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் இருந்தேன் என்றால் 10 நாட்கள் இருந்தேன். அதன் பின்னிட்டு வேறு எந்த மருத்துவமனையிலும் நான் சிகிச்சை பெற வில்லை என்றால் சரிதான். நான் பூரண குணம் அடைந்துவிட்டதால் எனக்கு எந்த விதமான உடல் ஊனமும் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக நான் தான் போலீசில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மருத்துவ பில்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டு இரண்டு நாட்கள் கழித்து தான் நான் போலீசில்புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். பரத் என்பவர் எனக்கு பாலிய நண்பர் ஆவார். மேற்படி விபத்திற்க பரத் என்பவரின் அஜாக்கிரதைதான் காரணம் என்பதாலும் அந்த வாகனததில் 3 பேர் பயணம் செய்ததாலும் நஷ்டஈடு கணக்கிடும் போது எங்களுடைய அஜாக்கிரதை கணக்கில் கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு எந்த பாதிப்பும் இல்லாத காரணத்தினால் தான் நேரடியாக காவல்நிலையம் ஆஜராகி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

**ஒம்/- PW1**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.